Written by Administrator
Thursday, 01 August 2013 00:00 -

□□□□□□□□□□□□ □□□□□: 44□□□□□ □□□□□: 12□□□□□ □□□□□□□ 2013

தலித் மக்களின் ஒதுக்கலும் விலக்கலும் : மாற்றமும் தொடர் நிகழ்வுகளும்

– சுதா பம்

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, நாடானது என்ற ஜனநாயக முறையைக் கொண்ட ஓர் அரசியலமைப்பை இயற்றி, பன்னெடுங்காலமாக ஒடுக்கப்பட்டிருந்த தலித் சமூகத்தினருக்கு தனிமனித உரிமைகளும், சமூக உரிமைகளும் கிடைக்க வழிவகுக்கப்பட்டது. சுதந்த சட்டமைப்பில் படிப்படியாக மாற்றங்களைக் கொணர்ந்து, சமத்துவச் சமுதாயம் உருவாக வேண்டுமென்பதே இந்தியாவின் வளர்ச்சித் திட்ட இலக்காக இருந்தது. பண்டித நேருவின் தலைமையில் அமைந்த அரசின் ஜனநாயக மறுமலர்ச்சிக் கோட்பாடும் அதுவே எனினும் நமது ஜனநாயகம் வேர்கொண்ட கடந்த அறுபதாண்டுகளில், தலித் மக்கள் ஒதுக்கப்படுவதும் விலக்கப்படுவதும் தொடர்ந்து நீடிக்கிறது. தலித் மக்களின் பொருளாதாரச் சமத்துவமின்மைக்கும் சமூக பாரபட்சத்திற்கும் காரணம் ஒன்றுக்கொன்று ஆதரவான இரண்டு விஷயங்கள்: அவை, நம் நாட்டில் பெரும்பாலோர் எதிர்கொள்கின்ற வறுமையும், பாரபட்சத்திற்கு மூலகாரணமான சாதியக்கட்டமைப்பும்தான். பிறப்பினால் ஒவ்வொரு சாதியினருக்கும் கிடைக்கின்ற, பண்பாட்டு, பொருளாதார உரிமைகளே, பலவிதமான விலக்கல்களுக்குக் காரணம். இதற்கு சக விலக்கல்களால் ஆகிய நாடுகளில், தலி மனிதர்களின் வாய்ப்புகள் மறுக்கப்படுவதைத் தோப் பரிக பெற்ற அறிஞர் அமர்த்தியா சென் விளக்கிக் கூறியுள்ளார். "பொது இடத்தில் வெட்கமின்றி தலைகாட்ட இயலாத நிலை" என்று ஆட்டம்பித் விவரித்தவாறு சமூக வாழ்வில் பங்கெடுக்க முடியாதபடி உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று அவர் கூறியுள்ளார். சமூகக் கலந்துறவில் இருந்து விலக்கி வைக்கப் படுவதால், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவையும் மறுக்கப்படுகின்றன. சந்தையமைப்பில் பங்கெடுக்க முடியாததால், பொருளாதார நலிவு ஏற்பட்டு வாய்ப்புகளும் கைகூடாமல் போகின்றன.

ஒடுக்கப்பட்ட பிரிவினரின் நிலைமை சுதந்திரத்திற்குப் பின்னர் வெகுவாக மாறியிருந்தாலும், பெருமளவிலான ஒதுக்கல்களும், விலக்கல்களும் தொடர்வதால், சமத்துவ ஜனநாயகத்தை உருவாக்கும் நமது முயற்சிகளுக்கு அவை பெரும் சவால்களாக விளங்குகின்றன. வரலாற்று ரீதியாகவே தலித்களுக்குக் கல்வி முறையில் இடமில்லை. நில உரிமை கிடையாது. உடலுழைப்பு வேலைகளே செய்ய வேண்டும். சமூக – அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுக்க வாய்ப்பு இல்லை. 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, சுமார் 16.66 கோடி, அதாவது நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 16 சதவீதம் பேர் தலித் மக்கள். இவர்களில் பெரும்பான்மையோர் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், பீகார், உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் ஆகிய ஐந்து மாநிலங்களில் இருக்கின்றனர்.

நகர்ப்புறங்களில், ஏனைய சாதியினரைவிட தலித்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. தமது வாழ்வாதாரத்திற்குப் பாரம்பரியமான ஊரக வேலைகளையே அவர்கள் நம்பியிருக்கின்றனர். அவர்களின் பின்தங்கிய நிலைமைக்கு இது ஓர் அடையாளம். வயிற்றுப் பாட்டுக்காக வெளியிடங்களுக்கும் செல்ல முடியாமலும், வேறுவிதமான வேலைவாய்ப்புகள் இல்லாமலும் பெரும்பாலான தலித் மக்கள் தவிக்கின்றனர். அத்தோடு நிலஉரிமை, உணவுப் போன்றவற்றிலும் பாரபட்சம். நிராமப்புற மக்களில் 41 சதவீதம் பேர் நில உரிமையாளர்களாக இருக்க, தலித் மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் மட்டும் சொந்தமாக நிலம் வைத்துள்ளனர். 1961ஆம் 2001ஆம் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் எழுத்தறிவு 45 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால், தலித் மக்களின், குறிப்பாக நிராமப்புறத்தினர் மற்றும் தலித் பெண்களின் எழுத்தறிவு விகிதம் மிகக் குறைவாகவே இருந்தது. எனினும் 1990களில் எல்.பி. பிரிவினரின் எழுத்தறிவு 17 சதவிகிதம் கூடியதுடன், நகர – நிராம வேறுபாடும் சுருங்கியது. இருந்தபோதிலும், பள்ளியில் தொடர்ந்து எத்தனை ஆண்டுகள் படிக்கிறார்கள் என்று பார்த்தபோது, தலித்

சுதா பம், போராசிரியர், அரசியல் ஆய்வு மையம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.

குழந்தைகள், பாதியிலே படிப்பை விட்டுவிடுகின்றனர் என்று ஆய்வில் தெரியவந்தது. 1990–91 மற்றும் 99–2000 வரையிலான காலத்தில் தொடக்கப்பள்ளிகளில் சேர்ந்த தலித் குழந்தைகளின் விகிதம் குறைந்துவிட்டது. உயர்கல்வி பயிலும் தலித்களின் எண்ணிக்கையும் இருமடிகளாக இல்லை. தொழில்முறை நுட்ப உயர்படிப்புகளில் தலித்களுக்கான ஒதுக்கீட்டு இடங்கள் பெரும்பாலானவை காலியாகவே உள்ளன.

சமூகக் கட்டமைப்பில் தலித் மக்கள் இன்னமும் விலக்கப்படுகின்றனர். நிராமப்பகுதிகளில் அவர்களின் வாழிடங்கள் ஊருக்குப் புறத்தே இருக்கின்றன. நகர்ப்புறங்களிலோ, குடிசைப்பகுதிகளில் வாழ்கின்றனர். குடிநீர், சுழிப்பிடம், சுகாதாரம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதில் வெட்கக்கேடான விஷயம், அவர்களில் பெரும்பாலோர் இன்னமும் மலம் அகற்றும் வேலை செய்வதுதான். 1993ஆம் ஆண்டிலிருந்து மனிதக் கழிவுகளை அகற்ற மனிதர்களை சடுபடுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகிவிட்டபோதிலும், இந்தியாவில் சுமார் 80 ஆயிரம் தலித்துகள் மலம் அள்ளும் வேலை செய்து வருகின்றனர். சட்டத்தை ஏற்காத 12 மாநிலங்களின் நகராட்சிகளும், மாநகராட்சிகளும் சட்ட நெறிகளை அப்பட்டமாக மீறுகின்றன.

நாடு சுதந்திரம் அடைந்தபிறகு தலித் மக்கள் எதிர்கொள்ளும் புறக்கணிப்பின் நிலவரம் மட்டுப்பட்டிருப்பது மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது. சுதந்திரத்திற்குப் பின்னர் தலித் மக்களின் நிலை மேம்பட்டதற்கு காரணம் அரசாங்கம் பின்பற்றி வரும் 'பேணிக்காக்கும் பாரபட்ச கொள்கைள்' (Protective Discrimination) தான். நமது அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள இக்கொள்கையினால், சமூகக் கட்டமைப்பிலும், அரசமைப்பிலும் அவர்களை உள்வாங்கிக் கொள்வதோடு, அவர்களின் பங்கெடுப்பை ஊக்கப்படுத்தியும், பாரபட்சம் இல்லாத நிலையை ஏற்படுத்தியும் வருகிறோம். ஆனாலும் நமது சமச்சீரற்ற பொருளாதார அமைப்பில், தலித்துகளிடையே உள்ள வசதி படைத்த லெயர் (Creamy layer) மட்டுமே அரசாங்க திட்டங்களின் பயன்களை அனுபவிக்கின்றனர். பெரும்பான்மையான தலித்துகள், வாய்ப்புகள் இன்றி ஒதுக்கப்பட்டு ஏழைகளாகவே இருக்கின்றனர். எனினும், மார்க் கலாண்டர் (Marc Galanter) கூறுவது போல, பேணிக்காக்கும் பாரபட்சக் கொள்கைகளை அரசு செயல்படுத்தாமல் இருந்தால், தலித் மக்கள் சமூகக் கட்டமைப்புக்கு வெளியேதான் இன்னமும் இருப்பார்கள்; சமூக இயங்கு நிலையை அவர்களால் எட்டியிருக்க முடியாது.

1990களின் பிற்பகுதியில் இருந்து, "பேணிக்காக்கும் பாரபட்சக் கொள்கை' பற்றிய விவாதங்களின் போக்கு மாறிவிட்டது. உலகமயமாக்கலினால், மத்திய தர தலித் அறிவுஜீவிகளின் சிறுகுழு ஒன்று தமது கல்வி அறிவாலும் செல்வாக்கினாலும், நமது அரசமைப்பில் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது. பொருளாதாரத் தாராளமயமாக்கத்தால் அரசுத் துறை வேலைவாய்ப்புகள் சுருங்கிவிட்டன என்றும், விரைந்து விரிந்துவரும் தனியார் துறையில் இடஒதுக்கீட்டு முறையை செயல்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர்.

வேறு நிலரோ, 2002 ஜனவரியில் நடந்த வேலூர் மாநாட்டில் விவாதிக்கப்பட்டதுபோல் அமெரிக்க முறையைப் போன்ற விரிவாகப் பன்முகத் தன்மை முதலான வேலைகளைத் தொடங்க வேண்டும் எனக் கோருகின்றனர். சமீபத்திய சில ஆய்வுகள், இந்தியாவில் இதுவரை ஆராயப்படாத புதிய விவாதங்களைத் தொடங்கியுள்ளன: அதாவது, உலகமயமாகிவிட்ட சந்தை சூழலில் உயர்கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சாதி அடிப்படையிலான பொருளாதார பாரபட்சத்தின் பாதிப்பு எப்படி இருக்கிறது, அதன் வடிவம் என்ன, கூறுகள் என்ன, என்பதே அது.

சமூகத்தின் மற்ற பிரிவுகளில் பெருமளவில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தொடர்ந்தபோதும், தலித்துகளின் பொருளாதார நிலைமை வெகுவாக மேம்பட்டிருக்கிறது. முதலாளித்துவ வளர்ச்சியும், போட்டி அரசியல், சாதி அமைப்பை நலியச் செய்துள்ளன; அவற்றால் தலித்துகளுக்கு இடையே சமத்துவமின்மை தோன்றிவிட்டது என்பது வேறு விஷயம். தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் (National Sample Survey) 1999–2000 ஆம் ஆண்டறிக்கைப்படி, நிராமப் புறங்களில் உள்ள தலித்துகளில் 29.9 சதவீதம் பேர் மட்டுமே விவசாய நிலம் போன்ற மூலதனச் சொத்துக்களைப் பெற்றுள்ளனர். அந்த அறிக்கையின்படி, நாட்டில் உள்ள தலித்துகளில் 75 சதவீதம் பேர் நிலமற்ற கூலித் தொழிலாளிகள். நிலம் வைத்திருப்பவர்களும் ஏதோ பெயரளவுக்கு

Written by Administrator
Thursday, 01 August 2013 00:00 -

ஒரு சிறு பகுதியை மட்டும் வைத்திருப்பார்கள். அதனால் போதிய லாபம் ஏதும் இருக்காது. எனவே குறைந்த வருவாய், குறைவான துகர்வு, பெரிய வறுமை என சுமார் 35.43 சதவீதம் தலித் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடுகின்றனர். இதர பிற்பட்ட வகுப்பினர் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் தலித் மக்களின் நில உரிமைகள் ஒடுக்குதலுக்கு ஆளாகின்றனர்.

தலித் மக்களின் ஒரு பிரிவினர், இன்னமும் தொடர்ந்து விவசாயத்தோடு, பாரம்பரியமான தமது குலத் தொழில்களைச் செய்து வருகின்றனர். அவர்களுடைய திறமைகளைப் பணமாக்கிக் கொள்ள முதலாளித்துவ முறை வாயில்களை, திறந்துவிடுகிறது. நகர்ப்புறங்களில் அவர்கள் அமைப்பு ரீதியான தொழிற்சாலைகளிலும், அமைப்பு சாரா தொழில்களிலும் வேலை செய்கின்றனர். சிலர் சிறு கடைகள் நடத்துகின்றனர்; சிலர் சிறுதொழில் முனைவோராக உள்ளனர். அறுவலகப் பணி செய்வோர் பெரும்பாலும் பொதுத்துறை நிறுவனங்களில்தான் உள்ளனர். ஆனால் அந்த எண்ணிக்கை மிகவும் குறைவானது. இந்தியப் பொருளாதாரத்தில் தலித் பிரிவினர் ஒதுக்கப்படுவது குறித்து, அமைப்பு சாரா துறையின் தொழில்முனைவோருக்கான தேசிய ஆணையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. நாட்டின் மொத்த தொழிலாளர்களில், சமூகப் பாதுகாப்போ, வேலைப் பாதுகாப்போ இல்லாதவர்கள் 92 சதவீதம் பேர். ஒரு தொழிலாளியின் சமூக அடையாளம், அவனது கல்வியறிவு, இராமப்புறச் சார்பு ஆகியவற்றின் காரணமாக பாரபட்சம் அதிகரிக்கிறது என அந்த அறிக்கை கூறுகிறது. அவர்களில் பெரும்பான்மையோர் தலித்துகள் என்பதை நினைவில் பார்த்து அறியலாம்.

விரைந்த பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது, தலித் மக்களுக்கு எதிரான சாதிக் கொடுமைகள் ஒழிந்துவிடும் என நம்பினோம். ஆனால் 1970களில் இருந்து இரண்டு அம்சங்கள் நமக்குப் புலப்படுகின்றன. முதலாவதாக முன்னேற்றம் அடைந்த ஹரியானா, பஞ்சாப், மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் தலித்துகளுக்கு எதிரான சாதியக் கொடுமைகள் அதிகரித்து வந்துள்ளன. இரண்டாவதாக, வழக்கமான தீண்டாமைக்குப் பதிலாக, தலித் மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது, அவர்களின் வீடுகளைக் கொளுத்துவது, அக்குலப் பெண்களைக் கற்பழிப்பது, நிர்வாணமாக்கி வீதிகளில் விரட்டுவது போன்ற அட்டூழியங்கள் பெருகிவிட்டன. தலித்களின் பொருளாதார நிலை மேம்படும்போது, அவர்களுக்கு எதிரான அட்டூழியங்களும் அதிகரிக்கின்றன. பொறாமை உணர்வு துள்ளடப்படுகிறது. இதற்கு கைலாஞ்சி (Kailanji) சம்பவமே சிறந்த உதாரணமாகும். ஹரியானா மாநிலத்தில் உயர்சாதியினரின் பஞ்சாயத்துகளில் தலித் பெண்கள் கொடூரமாக நடத்தப்படுகின்றனர். 2002 ஆம் ஆண்டில், தலித் மக்களுக்கு எதிராக கொடுமையும் கொடூரமும் புரிந்ததாக 33,507 வழக்குகள் பதிவாகி உள்ளன. ஆதிதிராவிடர் பழங்குடியினர் (கொடுமை தடுப்பு) சட்டம் 1989ம், பின்னர் 1995ஆம் ஆண்டின் விதிகளும் இயற்றப்பட்டபோதிலும், எதிர்ப்புகள் அதிகரித்தே வந்துள்ளன. ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நல தேசிய ஆணையத்தின் 1990ஆம் ஆண்டு அறிக்கை சொல்வது என்னவென்றால், 1980ல் இருந்து தலித் மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு முக்கியக் காரணம் அரசியல் பொருளாதாரக் காரணிகளே அன்றி, சமூக-பண்பாட்டுக் காரணிகள் அல்ல என்பதே. இதனால், தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று பொருளல்ல; அண்மை ஆய்வுகள் தீண்டாமைக் கொடுமை தொடர்வதை உறுதிப்படுத்தியுள்ளன.

ஆனால் அரசியல் தளத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஜனநாயக நெறியையும் பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் நீண்ட காலக் கொள்கையான 'பேணிக்காக்கும் பாரபட்ச'க் கொள்கையினால், தன்னம்பிக்கைமிக்க, கற்றறிந்த, அரசியல் விழிப்புணர்வு கொண்ட, புதிய தலைமுறையை மத்திய தர தலித் மக்கள் உருவாகியுள்ளனர். ஆதிக்கத்தை ஏற்கவோ, விலக்கலை ஒப்புக் கொள்ளவோ அவர்கள் தயாராக இல்லை. தன்னை ஒரு 'தலித்' என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் போக்கு நாடெங்கும் பரவலாகிவிட்டது. இதனால் தலித் மக்களிடையே ஒத்த தன்மை உருவாகவில்லை; தலித் மக்களிடையே உள்ள பலவேறு குழுவினர்களிடையே ஏற்றத்தாழ்வும் வன்முறையும் நீடிக்கிறது. எனினும் தலித் என்று அடையாளப் படுத்திக் கொள்வதன்மூலம், மேல்சாதியினரின் ஆதிக்கத்தையும் ஒடுக்குமுறையையும் எதிர்க்கும் துணிச்சலும், தன்னம்பிக்கையும் அவர்களிடையே வளர்கிறது.

இதன் தொடர்ச்சியாக, தலித் தலைவர்களின் முன்முயற்சியாலும், அவர்களுக்கென அரசியல் கட்சிகள் உருவானதாலும், அரசியல் போட்டிகளாலும், தலித் மக்களின் அதிகாரம் ஓங்கியது; அரசியலின் மைய நீரோட்டத்திற்கு அவர்கள் வந்துவிட்டனர். முன்னெப்போதும் இராத அளவிற்கு அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வு பெருகிவிட்டது. 1990களில் இருந்து தேர்தலில் வாக்களிக்கும் தலித்துகளின் எண்ணிக்கை அதிகரித்தே வந்துள்ளது. இந்தியக் குடியரசுக் கட்சி, தலித் பாந்தர் கட்சி, போன்ற தலித் இன அரசியல் கட்சிகள் உருவாகியுள்ளன. எனினும் 1980களில் வட இந்தியாவில் நாம் கண்ட தலித் மக்களின் உறுதிபாடு, புதிய குணாம்சத்தையும், பல பிரத்யேகக் கூறுகளையும் கொண்டது. மேல் சாதி மக்களுக்காக, அவர்களால் இயக்கப்படும் ஜனநாயகத் திட்டம் மற்றவர்களைப் புறந்தள்ளுவது குறித்த, கற்றறிந்த புதிய தலைமுறை தலித் மக்களின் கண்ணோட்டம் வேறு மாதிரியானது. தலித் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்ட, பொருளாதார வளர்ச்சியின் பயன்களில் ஒருபகுதியைப் பகிர்ந்து கொள்ளாத, தீண்டாமைக் கொடுமையை முடிவுக்குக் கொண்டு வராத அரசாங்கத்தை பற்றிய மாயபிம்பம் அவர்களிடையே தகர்ந்துபோனது. வளர்ச்சியின் பலன்களைப் பெறுவதில் இருந்து தலித்துகளை விலக்கிவிடும் சமூக அரசியல், பொருளாதாரம் செயற்பாடுகளுக்கு எதிர்வினையாக அவர்களின் உறுதிப்பாடு இருந்தது. நமது கட்டமைப்பைத் தகர்த்துவிடும் நோக்கத்தோடு அது உருவாகவில்லை; மாறாக, சமூக – அரசியல் கட்டமைப்புக்குள்ளேயே தலித்துகளுக்கும் சமூக நீதி கிடைப்பதை உறுதி செய்யவே அது உருவானது.

இவ்வாறாக, மாற்றமும், தொடர் நிகழ்வுகளும் கடந்த காலத்தில் இருந்தே தோன்றியுள்ளன. தலித்துகளின் சமூக பொருளாதார ஒதுக்கல்களைக் குறைத்து, அவர்களை உள்வாங்கிக் கொள்ளும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், நாட்டின் ஒருசில பகுதிகளில் மட்டுமே இந்தக் மாற்றங்கள் ஏற்பட்டு, தலித்துகளின் ஒரு சிறு பிரிவினரே பயன்பெற்றுள்ளனர். இராமப்புறங்களில் உள்ள பெரும்பான்மை தலித் மக்கள் நம்முடைய ஏழ்மையினாலும், கல்வி அறிவின்மையாலும் நம் வாழ்விலும் பொது வாழ்விலும் சமூக விலக்கலுக்குத் தொடர்ந்து ஆளாகிவருகின்றனர். அண்மைக் காலங்களில் நமது ஜனநாயகம் சமூக முறைமையில் ஆழ வேர்க் கொண்டு வரும்போது இதுபோல் நடப்பது முரணாகவே இருக்கிறது.●

யோஜனா – இணைய சிறப்புக் கட்டுரைகள்

யோஜனா இதழ் அதன் வாசகர்கள் பயனடைவதற்காக 'இணைய சிறப்புக் கட்டுரைகள்' என்ற பெயரில் புதிய சேவையைத் தொடங்குகிறது. இதன்படி, www.yojana.gov.in. **என்ற முகவரி கொண்ட யோஜனாவின் இணையதளத்தில் தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகள் வெளியிடப்படும். இந்தப் பகுதியில் இடம்பெறும் கட்டுரைகள் குறித்த அறிவிப்பு, அந்தந்த மாதத்திற்கான யோஜனா இதழில் இடம்பெறும். ஆனால், இவை யோஜனா இதழில் அச்சு வடிவில் இடம்பெறாது. யோஜனா இணைய சிறப்புக் கட்டுரைகள் பகுதிக்காக கீழ்க்கண்ட கட்டுரைகளை அதன் இணையதளத்தில் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம்.**

1) **மாறிவரும் இந்தியச் சூழலில் முதியோரின் பிரச்சினைகள்**
   – **எழுதியவர்:** டாக்டர் சகுந்தலா சி. ஷெட்டார்
2) **இன அழிப்பும் அசாமின் தன்னாட்சி கவுன்சில்களும்**
   – **எழுதியவர்:** திரு. நவநீத தியோரி
3) **நகர்ப்புற ஏழைகள் சார்ந்த சூழலில் உள்ளடக்கிய திட்டமிடல்**
   – **எழுதியவர்:** டாக்டர் அம்பேதுமார் ஸ்ரீவஸ்தவா
4) **அரசு, ஜனநாயகம் மற்றும் வளர்ச்சி: அமைப்பு சார்ந்த கண்ணோட்டங்கள்**
   – **எழுதியவர்:** திரு. பி. சந்திரசேகரன்

உங்களின் கருத்துகளையும், யோசனைகளையும் yojanace@gmail.com **என்ற மின்னஞ்சலில் எங்களுக்கு தெரிவியுங்கள்.**